மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே நான் குறிப்பிட்டதுபோல் சில குளங்கள் தூர் எடுப்பது ஆய்வில் உள்ளன. ஆய்வு முடிந்தவுடன் தேவையான இடங்களில் எல்லாம் இந்தப் பணி மேற்கொள்ளப்படும்.

திரு. க. உரோ. எட்மண்ட்: நெல்லை மாவட்டத்தில் தூர்வாரி இயந்திரங்கள் வேலைசெய்வதாகச் சொன்னார்கள். எந்த எந்தக் குளங்கள் அவ்வாறு தூர்வாரப்பட்டிருக்கின்றன? தூர்வாரப் படாத குளங்கள் உடனடியாகத் தூர்வாரப்படுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எந்த எந்தச் குளங்கள் தூர்வாரப்பட்டிருக்கின்றன என்கிற விவரம் இல்லை. எந்த எந்த குளங்கள் தூர்வாரப்பட வேண்டும் என்பதாக மாவட்ட நிர்வாகப் பொறியாளரால் கொடுக்கப்படுகிற விவர அடிப்படையில் ஆராயப்பட்டு பணிகளை அரசு மேற்கொள்ளுகிறது.

வேலூர் வட்டம் சதுப்பேரி ஏரி

* 454 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

வேலூர் தாலுக்கா சதுப்பேரி ஏரி எப்போது மராமத்து செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வேலூர் வட்டம், சதுப்பேரி ஏரி 1969–70-ல் மராமத்து செய்யப்பட்டது.

திரு. கே. எ. வகாப்: வேலூரில் குடிதண்ணீர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிற காரணத்தினால் அந்த ஏரியை தூர் எடுத்தால் மிகவும் உதவியாக இருக்கும். இதை உத்தேசித்தாவது அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த ஏரியின் கரையை உயர்த்துவதற்காக 33 ஆயிரம் ரூபாயும், ஆற்றுக்கால் வாய்க்கால்களை சரிப்படுத்த 41,200 ரூபாயும், வெள்ளத்தடுப்பு நடவடிக்கைக்காக 18,400 ரூபாயும் செலவிடப்பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டம் ஆற்றுப் பாசனம் இல்லாத மாவட்டம். ஏரிகளை மட்டும் நம்பியிருக்கிற மாவட்டம். ஏரிகளைத் தூர் வாருவதற்கு ஒதுக்கப்பட்ட பணம் போதவில்லையென்று சொல்கிறார்கள். அந்த மாவட்டத்திலுள்ள ஊர்களும் "சதுப்பேரி", "நாகனேரி" போன்றவைகளாகவே இருக்கின்றன. ஆகவே, அந்த மாவட்டத் திலுள்ள ஏரிகளில் தூர் வாருவதற்கு நிறையப் பணம் ஒதுக்கித்தர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, போதுமான பணம் ஒதுக்கப்பட்டு, வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. தனிப்பட்ட புகார் ஏதாவது வந்தால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

இராணிப்பேட்டை முதலிய நகராட்சிகளில் சாக்கடை அமைப்புத் திட்டம்

* 455 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து, கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை, வாலாஜாபேட்டை போன்ற நகராட்சிகளுக்கும், மேல் விஷாரம், வந்தவாசி, செய்யாறு போன்ற பேரூராட்சிகளுக்கும் சாக்கடை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அமுல் செய்யப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, ராணிப்பேட்டை வாலாஜாபேட்டை போன்ற நகராட்சிகளுக்கும், வந்தவாசி, செய்யாறு, மேல்விஷாரம் போன்ற பேரூராட்சிகளுக்கும் குடிநீர்த் திட்டம் அமல் செய்யப்பட்டு வருகிறதா? டிரைனேஜ் இல்லாத காரணத்தால் கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. ஆகவே, டிரைனேஜ் அமைக்கும் திட்டத்தை அரசு பரிவுடன் கவனிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்பது புதை சாக்கடைத் திட்டம் என்று கருதுகிறேன். பெருநகரங்களுக்கு இத்திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. படிப்படியாக நிறைவேற்றப்படும். தற்போது மேல்விஷாரம், செய்யாறு, வந்தவாசி போன்றவைகளில் புதை சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவதற்கு திட்டம் இப்போது இல்லை.

Crash Programme for Production of Pulses.

* 456 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR :
DR. H. V. HANDE :
THIRU P. S. MANIYAN :
THIRU K. A. WAHAB :

Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any massive programme to grow pulses has been launched in this State during January 1971 : and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1970–71-ம் ஆண்டுக்கு தமிழ்நாட்டில் பயறு வகைகள் உற்பத்தியைக் கூடுதலாக 5.35 லட்சம்